**நாள்:. 28.07.23 சி.சி. 4/2014**

**அ.சா.1 தனுஷ்கோடி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி...**

**சாட்சி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர் ஆஜர் சாட்சியை சத்தியப்பிரமான செய்துவைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி பதிவு செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை தொடர்ச்சி ( அரசுதரப்பில்)**

நான் சபாபதியிடம் கொடுத்த நகையை அவர் வெங்கடேஸ்வரியிடம் கொடுத்து மேலூரிலுள்ள முத்தூட் பைனான்சில் அடகு வைத்து ரசீதின் ஜெராக்ஸ் நகல்தான் என்னிடம் உள்ளது. அசல் ரசீது யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர். ( இவ்வழக்கில் வாதி கொடுத்த புகார் மனு வழக்கு கோப்பில் இல்லை. அதன்காரணமாக அரசுதரப்பில் நீதிமன்றத்தில் குறியீடு செய்யமுடியவில்லை.)

**குறுக்கு விசாரணை: (2-வது எதிரிதரப்பில்)**

உங்கள் மகள் ஜெயமணியும், 2-வது எதிரி வெங்கடேஸ்வரியில் குடியிருந்தனர் என்றால் இல்லை. இருவரும் வெவ்வேறு தெருவில் குடியிருந்தார்கள். உங்களை போலீசார் விசாரித்தபோது 1-வது எதிரி பணம் கேட்டதாகவும், பணம் இல்லை என்று நீங்கள் தெரிவித்ததுதம், அதற்கு நகை கேட்டதாகவும், உங்களால் போலீசார் விசாரணையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். உங்களிடம் 1-வது எதிரி பணம் கேட்ட சமயத்திலும், உங்களிடமிருந்து நகை 1-வது எதிரி வாங்கிய சமயத்திலும் 2-வது எதிரி உடன் இல்லை என்றால் சரிதான். 1-வது எதிரி எந்த வருடம் பணம் கேட்டு நகை வாங்கி சென்றது குறித்து போலீசார் விசாரணியல் சொல்லவில்லை என்றால் 13 வருடத்திற்கு முன்பு வாங்கினார். ஞாபகமில்லை. நகையின் வகை, அடையாளம் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். டாலர் செயின் -2, ஒரு ஒத்த செயின் 3 பவுன், 2 மோதிரம் முக்கால் பவுன் ஒன்று, அரை பவுன் ஒன்று. கல் தோடு ஜோடி ஒன்று, டாலர் தோடு 2, 4 பவுன். 1-வது எதிரி உங்களிடமிருந்து நகையை வாங்கிக்கொண்டு என்ன காரணத்திற்காக வாங்கிச்சென்றார் என்றால் 1-வது எதிரியின் தாயாருக்கு உடலநிலை சரியில்லை என்று வாங்கிச்சென்றார்.

உங்களிடமிருந்து நகையை 1-வது எதிரி வாங்கிச்சென்றபோது எங்கு அடகு வைப்பதாக சொன்னார் என்றால் தாயாருக்கு உடல்நிலை சரியில்லை, அதற்காக வாங்கிச்சென்றார். நகையை ஒரு வருடம் கழித்து உங்கள்தரப்பில் 1-வது எதிரியிடம் கேட்டீர்களா என்றால் 1-வது எதிரிதான் 1 வருடம் கழித்து நகையை தருவதாக சொன்னார். போலீஸ் விசாரணையில் 1வது எதிரியிடம் நகையை திருப்பி கேட்டபோது 2-வது எதிரி அடகு வைத்துள்ளதாக சொன்னதாகவும், அப்போது 1-வது எதிரியிடம்தான் நகை கொடுதுத்துள்ளதால் 1-வது எதிரிதான் திருப்பி தரவேண்டும் என்று கேட்டதாக சொல்லியுள்ளேன். 1 மற்றும் 2வது எதிரிகள் உறவினர்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நகை சம்மந்தமாக 2-வது எதிரியின் கணவரிடம் கேட்டீர்களா என்றால் இல்லை, 2-வது எதிரியிடம்தான் கேட்டேன். அவர்தான் அடகு வைத்ததாக சொன்னார். 1-வது எதிரிதரப்பில் புகார் மனு நீதிமன்றத்தில் மனு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1-வது எதிரி கொடுத்த புகாரில் உங்களால் ரூ. 65 ஆயிரம் 1-வது எதிரியிடம் பெற்றுக்கொண்டு நகையை வாங்கிக்கொண்டதாக 1-வது எதிரி கொடுத்த புகாரில் உங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் இல்லை, பணம் வாங்கவில்லை.

உங்கள்தரப்பில் முத்தூட் பைனான்ஸ் நிறுவனத்தில் நகையை 2-வது எதிரியிடம் கொடுக்கக்கூடாது என்று எழுத்துப்பூர்வமான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதா என்றால் வாய்மொழியாகத்தான் தெரிவிக்கப்பட்டது. 2-வது எதிரிதரப்பில் நகை அடகு வைத்ததற்கான ரசீது உங்களிடம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 1-வது எதிரி சார்பாக நான்கேகால் பவுன் நகையை மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகததிற்கு விசாரணையின்போது கொடுத்தார் என்றால் சரிதான். நகையை பெற்றுக்கொண்டதாக மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் விசாரணையில் எழுதிக்கொடுத்ததில் 1வது எதிரியிடம் 2007ம் வருடம் நகை கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்தூட் பைனான்சில் நகை அடகு வைத்த தேதி குறித்து நீங்கள் தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரிந்துகொண்டேன். உங்கள்தரப்பில் முத்தூட் பைனான்சில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டும் 2-வது எதிரிதரப்பில் 07.07.11ல் நகையை திருப்பிக்கொண்டார் என்றால் சரிதான்.

1-வது எதிரிதரப்பில் 2-வது மற்றும் அவரது கணவர் மீது கொடுக்கப்பட்ட புகார் ஆனது பொய் என்று விசாரணையில் தெரியவந்தது என்றால் சரிதான். உங்களால் போலீஸ் விசாரணையில் **"என்னிடம் மீதியுள்ள பத்தேகால் பவுன் நகையை வெங்கடேஸ்வரி கொடுப்பதாக**

**ரத்தினசபாபதி (1-வது எதிரி) கொடுப்பதாக சொல்ல நான் வெங்கடேஸ்வரியிடம் கேட்டபோது நான் உன்னிடம் நகை வாங்கவில்லை, நீ யாரிடம் கொடுத்தாயோ அவரிடம் போய் கேள் என்று சொன்னதன்பேரில் நான் ரத்தின சபாபதியிடம்போய் கேட்டபோது நான் உனக்கு தரமுடியாது நீ வெங்கடேஸ்வரியிடம்போய் கேள் என்று சொன்னவுடன் நான் என் நகையை நீதான் வாங்கினானய் ஆகவே நீதான் கொடுக்கவேண்டும் என்று சொன்னவுடன் ரத்தினசபாபதி நகையை கொடுக்கமுடியாது என்று சொல்லியதும் 10.04.13ம் தேதி கீழவளவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்."** இந்த புகார் கொடுக்கும் முன்பு இதேமாதிரி புகார் ஒன்று மாவட்ட கண்காணிப்பாளரிடம் கொடுத்தீர்களா என்றால் ஆமாம். பட்டியல் சாட்சி 2 அய்யங்கோயில் என்பவர் உங்கள் மகன் என்றால் சரிதான். உங்களிடம் நகை வாங்கியது 1-வது எதிரி மட்டும்தான் என்றாலும், அந்த நகையை திருப்பி கொடுக்கவேண்டியது 1-வது எதிரி மட்டும்தான் என்றாலும், 2-வது எதிரி உங்களிடம் நகை எதுவும் வாங்காததால் 2-வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

**குறுக்கு விசாரணை: (1-வது எதிரிதரப்பு )**

**போதிய சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.**